மலர் - 27 / இதழ் -07/ ஜூலை 2026
Volume -27/ Issue - 07/ July 2026
தமிழ் மாத இதழ் /தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு

# VALARUM VINNARASU




இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்
INDIA CHURCH GROWTH MISSION

# பொதுசேவகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் பிரியமான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

“கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்” (எரேமியா 17:7).

மேற்கண்ட வசனம் கூறுவது போல, கர்த்தரை நம்பி, அவரையே சார்ந்து வாழ்கிற மனிதன் மட்டுமே, பாக்கியவானாக இருக்க முடியும். கர்த்தரை நம்பி வாழ்வோம். அவர் நம்மை நடத்துவார்.

ஜூன் 5 முதல் 8 வரை வட இந்திய அருட்பணியாளர்களுக்கான சிறப்புக் கூடுகை, சத்தீஷ்கரிலுள்ள ராய்ப்பூரில் நடைபெற்றது. இங்குள்ள அருட் பணியாளர்கள் அனைவரும் குடும்பத்தோடு பங்கு பெற்றனர். கூட்டங்கள் முடிந்தபின், புது உற்சாகத்தோடு, பெலத்தோடு தங்கள் பணித்தளங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஆண்டவருடைய பெரிதான கிருபையால், சத்தீஷ்கர் மாநிலத்தில் கட்டப்பட்ட, டாடோநார், கங்கால் ஆகிய இரண்டு ஆலயங்கள் தேவநாம மகிமைக் கென்று பிரதிஷ்டைச் செய்யப்பட்டது.

ஜூன் 14ஆம் தேதி பூந்தமல்லி (சென்னை)யிலுள்ள தேவாலயத்தில் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டு, ICGM செய்துவரும் அருட்பணிகளைக் குறித்து அறிமுகம் செய்தேன். இதற்கு வாய்ப்பளித்த போதகர். ஆபிரகாம் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.













தொடர்ச்சி கடைசிப்பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு. G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்
திருமதி. செல்வ டேனி சாலமோன்
திருமதி. ஜெனிபர் ரவிக்குமார்

ஆண்டுச் சந்தா:₹200/- ஆயுள் சந்தா:₹1500/-

வளரும் விண்ணரசு

நமது இந்தியாவில் உள்ள எல்லா மக்கள் கூட்டத்தினரையும், இயேசுவின் சீடர்களாக்க பாரம் கொண்ட, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் (ICGM) துதி–ஜெபக் குறிப்புகளையும், ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளாகவும், அவரது சீடர்களாகவும் விரும்புபவர்கள் அவரை அறியும் அறிவில் வளரத் தேவையான படைப்புகளையும் மாதந்தோறும் உங்களுக்குக் கொண்டு வருகிறது.

இதழின் உள்ளே...

| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| துதித்து மன்றாடுவோம்! | 07 |
| ஜுன் மாத வேத விடைகள் | 14 |
| சரியான விடை எழுதியவர்கள் | 20 |
| வேத வினாக்கள் | 21 |
| நடப்புச் செய்திகள் | 22 |

ICGM
58/1 முத்தாலம்மன் கோயில் தெரு,
சேலையூர், சென்னை- 600 073.
அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com

வளரும் விண்ணரசு இதழுக்கு சந்தா அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு அனுப்பிய விபரங்களை தெரிவியுங்கள்.

A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

## ICGM

**தரிசனம்: (Vision Statement)**

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்: (வெளி.7:9)**

“இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.”

**செயல்திட்டம்: (Mission Statement)**

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்: (மத்தேயு 28:19-20)**

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

அருட்செய்தி
நெகேமியா 2:18

Rev.S. டேவிட் சாலமோன்

பாபிலோன் சிறையிருப்புக்குப் பிறகு, சில யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பினர். அங்கே நகரத்தின் மதில்கள் இடிந்தும், வாசல்கள் எரிந்தும் கிடந்தன. அக்காலத்தில் பாரசீக மன்னன் அர்தசஷ்டாவின் அரண்மனையில் பானபாத்திரக்காரனாக இருந்த நெகேமியா, தனது சகோதரன் ஆனானியிடமிருந்து எருசலேமின் துயரமான நிலையை விசாரித்தறிந்தார். இந்த செய்தி அவரது இதயத்தை மிகவும் பாதித்தது.

**1. எருசலேமின் நிலையறிந்து துயரப்பட்ட நெகேமியா** (நெகேமியா 1:1–4)

நெகேமியா எருசலேமின் அவலநிலையை கேட்டபோது, “நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி... பிரார்த்தித்தேன்.” (நெகேமியா 1:4) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

ஒரு உண்மையான ஊழியன் மக்களின் வேதனைகளை உணர்கிறார். நெகேமியா சுகமான அரண்மனை வாழ்க்கை வாழ்ந்த போதிலும், தனது மக்களின் துன்பத்தைப் புறக்கணிக்கவில்லை. அவருடைய இருதயம் தேவனுடைய ஜனங்களுக்காக உடைந்தது.

இன்றும் சபையின் நிலை, சமுதாயத்தின் நிலை, குடும்பங்களின் சவால்கள், இளைஞர்களின் ஆன்மீக வீழ்ச்சி போன்றவற்றைக் கண்டு மனம் வருந்தும் தேவமனிதர்கள் தேவைப்படுகிறார்கள். தேவன் அப்படிப்பட்டவர்களைப் பயன்படுத்துகிறார்.

**2. பாவத்தை அறிக்கையிட்டு ஜெபித்த நெகேமியா** (நெகேமியா 1:5–8)

நெகேமியா தனது ஜெபத்தில் தனிப்பட்ட பாவங்களையும், ஜனங்களின் பாவங்களையும் அறிக்கையிட்டார். “நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்” (நெகேமியா 1:6) என்று அவர் ஜெபித்தார்.

ஒரு உண்மையான மறுமலர்ச்சி பாவ அறிக்கையிலிருந்து தொடங்குகிறது. பிறரை குற்றம் சாட்டாமல், தன்னைத் தானே ஆராய்ந்து தேவனிடம் மனந்திரும்புவது அவசியம். நெகேமியா தேவனுடைய உடன்படிக்கையையும் வாக்குத்தத்தங்களையும் நினைவுகூர்ந்து ஜெபித்தார்.

வேதம் சொல்லுகிறது, 2 நாளாகமம் 7:14இல் “என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்...” என்று வாக்குத்தத்தம் தந்திருக்கிறார்.

தேவசமுகத்தில் நம்மைத் தாழ்த்தி, இந்திய தேசத்தின் இரட்சிப்பிற்காக ஜெபிக்கும்போது, பரலோகத்திலிருக்கிற நமது தேவன், நம் தேசத்திற்கு ஷேமத்தைத் தர வல்லவராக இருக்கிறார்.

**3. தேவனின் வாக்குத்தத்தத்தை நம்பிய நெகேமியா** (நெகேமியா 1:9-10)

நெகேமியா, தேவன் மோசேக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்தார். ஜனங்கள் மனந்திரும்பினால் அவர்களை மீட்டுச் சேர்ப்பேன் என்று தேவன் கூறியிருந்தார்.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மாறாதவை. நாம் அவருடைய வார்த்தையை நம்பி ஜெபிக்கும்போது, அவர் பதிலளிக்கிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில், “பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்” என்ற கட்டளையைக் கொடுத்தார் (அப்.1:5). அது என்ன பிதாவின் கட்டளை? பரிசுத்த ஆவியின் பெலத்தைப் பெற்று பூமியின் கடைசிபரியந்தமும் அவருக்கு சாட்சிகளாக வாழ்வது. (அப்.1:8)

**4. மறுகட்டுமானப்பணிக்கு தேவதிட்டத்தை புரிந்து கொண்ட நெகேமியா** (நெகேமியா 1:11)

நெகேமியா ஜெபித்ததோடு மட்டுமல்லாமல், தேவன் திறக்கும் வழிக்காக காத்திருந்தார். அரசனின் முன்னிலையில் தயவு கிடைக்கும்படி தேவனிடம் மன்றாடினார்.

ஒரு உண்மையான ஜெபம் மனிதனை செயல்படத் தூண்டுகிறது. ஜெபமும் செயல்பாடும் ஒன்றோடொன்று இணைந்தவை.

எருசலேமின் மதில்கள் உடைந்திருந்தாலும், தேவனுடைய திட்டம் உடையவில்லை. நெகேமியாவின் ஜெபத்தின் மூலம் தேவன் புதிய தொடக்கத்தை ஏற்படுத்தினார்.

இன்றும் உடைந்த குடும்பங்கள், சோர்ந்து போன திருச்சபைகள், நம்பிக்கை இழந்து வாழ்க்கை வாழ்பவர்கள் ஆகிய அனைத்தையும் தேவன் மீண்டும் புதுப்பிக்க வல்லவராயிருக்கிறார்.

ஒரு கிராமத்தில் பழைய ஆலயக் கட்டிடம் ஒன்று மிகவும் சேதமடைந்திருந்தது. பலர் அதைப்பார்த்தும் எதுவும் செய்யவில்லை. ஆனால், ஒரு விசுவாசி மட்டும் தினமும் அந்த ஆலயத்திற்காக ஜெபித்து வந்தார்.

தேவன் அவரது இதயத்தில் அந்த பாரத்தை வைத்தார். அதன்பின்பு, அவர் சில நண்பர்களோடு இணைந்து ஆலயத்தைப் புதுப்பிக்கும் பணியைத் தொடங்கினார்.

சில மாதங்களில் ஆலயம் புதுப்பிக்கப்பட்டதைக் கண்டு, மக்கள் ஆச்சரியப்பட்டதோடு, அவரிடம் இந்தப்பணி எவ்வாறு தொடங்கியது என்று கேட்டனர். அதற்கு அவர், “இந்தக்கட்டிடம் கற்களால் கட்டப்படுவதற்கு முன் ஜெபத்தால் கட்டப்பட்டது” என்று பதிலளித்தார்.

நெகேமியாவின் வாழ்க்கை நமக்குக் கற்பிப்பது என்னவென்றால், எந்த மறு கட்டுமானப் பணியும் ஜெபத்தில் தொடங்குகிறது என்பதே.

எனவே, மக்களின் நிலைக்காக பாரம் சுமப்போம். பாவங்களை அறிக்கையிடுவோம். தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்புவோம். ஜெபத்துடன் செயல்படுவோம். அப்போது, தேவன் உடைந்த மதில்களையும், உடைந்த வாழ்க்கையையும் புதுப்பிப்பார்.

ஃஃஃ

**உங்கள் சந்தாவை புதுப்பித்து**
**பத்திரிக்கை ஊழியம் தொடர்ந்து நடைபெற உதவுங்கள்**

# ICGM
## வங்கி கணக்கு விபரங்கள்

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 10143136773 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | SELAIYUR, CHENNAI- 73 |
| IFSC CODE | : | SBIN0007948 |

icgm1014@sbi

அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கை

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 11194454531 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | VINAYAGA NAGAR, MADURAI. |
| IFSC CODE | : | SBIN0001479 |

ஆலய கட்டிட நிதிக்காக

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 926010015545855 |
| AXIS | : | AXIS |
| BRANCH NAME | : | SELAIYUR, CHENNAI-73 |
| IFSC CODE | : | UTIB0001181 |

மருத்துவ நிதிக்காக

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | IRAI ARASU TRUST |
| ACCOUNT NUMBER | : | 10143136762 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | MK UNIVERSITY - MADURAI-21 |
| IFSC CODE | : | SBIN0002235 |

பத்திரிக்கை ஊழியத்திற்காக

icgm1014@sbi
SCAN & PAY

OR

BANK
வங்கி கணக்குகள் மூலமாக

மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியோ அல்லது வங்கி கணக்குகள் மூலமாகவோ, உங்கள் காணிக்கைகளை அனுப்பி, அதன் விபரங்களை SMS/whatsapp மூலமாக **94459 24440** என்ற எண்ணுக்கு அனுப்புங்கள்.

உங்களுக்கு ரசீது அனுப்ப உதவியாயிருக்கும். | *நன்றி.*

# தமிழ்நாடு

ஜூலை-1

## கள்ளக்குறிச்சி மாவட்டம்

**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

ஓய்வு நாள் பள்ளியில் 153 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். திரைப்படத்தின் மூலமாகவும், காலை தெருப் பிரசங்கத்தின் மூலமாகவும் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, குழந்தை ஹரிணி, குழந்தை ஜெய் (மூன்று வயது) ஆகியோர் எழுந்து நடக்க ஜெபிப்போம்.

## கடலூர் மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு.M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எறப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, ரமேஷ் பாபு-சங்கீதா தம்பதிக்கு தேவன் தந்த குழந்தைப் பாக்கியத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட காமாட்சி, சுமித்ரா, காளியம்மாள் ஆகியோர் இரட்சிக்கப்பட, சிறுவர் ஊழியம் தொடர்ந்து நடைபெற, அருட்பணியாளர் வீட்டிற்கு கழிவறை கட்டப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.V. சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, வேல்முருகனுக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். பூபதி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, கண்மணியின் குழந்தைக்கு (கை கால் அசைவு இல்லை ) நல்ல சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## ஈரோடு மாவட்டம்

ஜூலை -2

**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

தாரணி, கௌரி, சங்கீதா, சந்தோஷ், லோகேஸ்வரி, தேவராஜ், சூர்யா, சித்ரா, செல்வி ஆகியோர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டததற்காகத் துதிப்போம். செக்கானூர் பகுதியில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட, தாரணி குடும்பம், சந்தோஷ் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

அன்னக்கொடி குடும்பத்திற்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஈஸ்வரி சிறுவர்கள், வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்து வருவதற்காகத் துதிப்போம். நாகம்மாள் (இடுப்பு கீழ்ப்பகுதி) சுகம் பெற, முருகன், மரகதம், கீதா, அமாவாசை ஆகியோர் மனந்திரும்ப, ராதிகாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, பாப்பாத்தி வீட்டில் நடைபெறும் ஜெபக்கூட்டம் ஆசீர்வதிக்கப்பட, மருதாச்சலம், ராஜன், மாரப்பன், சுரேஷ், பெரியசாமி, பேச்சி, ஆகியோர் குடும்பமாக ஆராதனைக்கு வர ஜெபிப்போம்.

## கோயம்புத்தூர் மாவட்டம்

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு. லூர்டஸ்– திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கணபதிபாளையம், பூவளபருத்தி, கரட்டுப்பாளையம், குள்ளேகவுண்டனூர், பொன்னாச்சியூர், உப்பிலியனூர், ஆவல்சின்னாம்பாளையம், பில்சின்னம்பாளையம், சமத்தூர் ஆகிய

கிராமங்களுக்காக. கணபதி, ரவி, அரவிந்த், சிவகுமார், ராதா, கவின்குமார், கலிதீர்த்தன், சரண்யா, திருமலைசாமி ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, கலாவுக்கு பல ஆண்டுகளுக்குப்பின் குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, திருமுழுக்கு எடுத்த சோபி, வின்சி, சாரோன், ராஜேஸ்வரி, ஜாஸ்மின், ஈபன், ஜெபினா, ஜெர்லின், சுந்தர், கெத்சியாள் ஆகியோருக்காகத் துதிப்போம். கிரீட்டா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, கலாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஜுலை-3**

**அருட்பணியாளர்:**

**திரு.எபிநேசர் உவைட்–திருமதி. மேரி**

ரம்யாவின் மகனுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். அமுதம், சுகந்தி, பிரேம்குமார், நித்தியா, ஷாலினி ஆகியோர் இரட்சிக்கப்பட, சுமதி கண் நோயிலிருந்து சுகம் பெற, ஜெயம்மாள், லட்சுமிக்கு சுகம் கிடைக்க, சஞ்சய், ஜெயக்குமார் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

திருமுழுக்கு எடுத்த மலர், பிரவீன், எஸ்தர், மேஷாக், ராஜேஸ்வரி, நார்ச்சம்மாள் ஆகியோருக்காகத் துதிப்போம். CVG வகுப்புகளில் கலந்துகொண்ட பிள்ளைகள் வேத வசனத்தில் வளரவும், அவர்களின் குடும்பங்கள் கர்த்தரை அறிந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

திருமுழுக்கு எடுத்த தீனா, சுவாதி, பழனியம்மாள், பூங்கொடி, மாரியம்மாள், சரஸ்வதி, கன்னியம்மாள் ஆகியோருக்காக, சீஷத்துவப் பயிற்சி நாகூரில் தொடங்கப்பட்டதற்காக, ரேவதி, சுந்தரி, லதா, செல்வி, பார்வதி, மாரியம்மாள் ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ராஜு நுரையீரல் புற்று நோயிலிருந்து சுகம் பெற, தனபால், சிவா, பிரசாந்த் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

**ஜுலை-4**

**அருட்பணியாளர்:**

**திரு.S. பால்ராஜ் –திருமதி. மரியாள்**

சந்திப், மதுமிதா ,ஸ்மித், விவீனா ஆகியோர் பொதுத்தேர்வில் நல்ல மதிப்பெண் எடுத்ததற்காக, ஆபிரகாம் மூளை இரத்த அடைப்பு சுகமானதற்காகத் துதிப்போம். பால்ராஜ், பாபு, அப்பாதுரை, ஜெய்சங்கர், இளங்கோ, சிவா, சுதா, சரிதா, ராஜேஸ்வரி, சுசீலா, தவமணி, மணிகண்டன் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, CVG நடைபெற்ற 4 கிராமங்களுக்காக, அஸ்வந்த் பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட கிரிநாத், கிருபா, ராஜா, சங்கீதா, ஸ்ரீமதி, சன்மதி, அஸ்வந்த், சுமதி நடராஜ், ராஜேஷ் ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள–இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

இயேசுமேரியின் மார்புகட்டி அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டதற்காக, பவித்திரா–பிருத்திவிராஜ் இவர்களின் தடைபட்ட திருமணம் நடைபெற்றதற்காக, பின்மாற்றத்தில் இருந்த வள்ளியம்மாள், பழனியம்மாள் ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, பரத்–சௌமியா, தங்கராஜ்–பட்டீஸ்வரி, சார்லஸ்–ஜெனி, மோகன்குமார்–செல்வி ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம்.

ரங்கம்மாள் மூச்சுதிணறல் நோயிலிருந்து சுகம் பெற, பார்த்திபன், கோதாவரி, சித்ரா, அபிராமி, திவ்யா, ஸ்வீட்டிகா, சௌமியா ஆகியோருக்குத் திருமணம் நடைபெற, கண் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டுள்ள ராஜம்மாள், ராஜீ, செல்வி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

ஜுலை-5

**திருச்சி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு.J.P.ரவிக்குமார்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியபுரம், வெங்கடாசலபுரம், சிக்கந்தப்பூர்பாளையம், சோபனபுரம், கொட்டாம்பட்டி, மங்கப்பட்டி, வைரசெட்டிபாளையம், மாராடி ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். பின்வாங்கி போனவர்கள் திரும்பவும் சபைக்கு வர, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஊழியர் வீடு கட்டுமான பணிகள் நிறைவடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.B. தினேஷ் – திருமதி. எமீமா பியூலா**

ஸ்வேதாவுக்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். கணேசன் (சிறுநீரக நோய்), சரண்யாவின் தாயார் (முதுகு தண்டுவட நரம்பு பிரச்சனை) ஆகியோருக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டுவேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி ஆகிய கிராமங்களுக்காக, திருமுழுக்கு எடுத்த சிவனம்மாள், M.புஷ்பம், S.புஷ்பம், சுப்புலட்சுமி, ஜெயா ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட 85சிறுவர்களுக்காக–அவர்களது குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஜுலை-6

**அருட்பணியாளர் :**

**திரு.S. சாமுவேல்–திருமதி. ரோகிணி**

புதிதாக ராஜேஸ்வரி, தமிழ், இப்ராகிம், சதீஷ், மணிகண்டன் ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, இப்ராஹிமுக்கு சுகம் கிடைத்ததற்காக–குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, அனிதாவிற்கு தேவன் கொடுத்த இரட்டை குழந்தைகளுக்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்டவர்கள் ஆராதனையில் கலந்து கொள்ள, ராஜேஸ்வரி கணவருடன் சேர்ந்து வாழ–நல்ல வேலை கிடைக்க, வனிதாவின் குழந்தைக்கு சுகம் கிடைக்க, பாண்டியன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. பிரவீன்குமார்–திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட T.அரசப்பட்டி, சமத்துவபுரம், வெயிலுகந்தபுரம், காமாட்சிபுரம், குளத்துவாய்ப்பட்டி, தூம்பக்குளம், வளையங்குளம் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். மதன் குடும்பம் இரட்சிக்கப்பட, மணிமேகலைக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.M. கார்த்தி–திருமதி. ரீஜா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பரமன்பட்டி, சென்னம்பட்டி, புதுப்பட்டி, பூசலபுரம், ஜம்பலாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, 38வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றதற்காக, புதிதாக திருமுழுக்கு எடுத்த நித்யாவுக்காகத் துதிப்போம். சிறுவர் ஊழியம் பின் தொடர் பணி செய்யப்பட, பெத்தம்மாள் வயிற்றுக் கட்டி நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

ஜுலை-7

**அருட்பணியாளர் :**

**திரு.A. கந்தசாமி–திருமதி. முருகம்மாள்**

பாப்பாத்தி அம்மா வீடு கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்ததற்காக, ஆலய கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருவதற்காக, புதிதாக திருமுழுக்கு எடுத்த வனபேச்சி, கருப்பாயி ஆகியோருக்காகத் துதிப்போம். மாரியப்பன்– ஜெயந்தி பிரிந்த குடும்பம் மீண்டும் சேர்ந்து வாழ–பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படாமல் இருக்க, சின்ன காளை

குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ஆலய கட்டிடப் பணிகள் தொடர்ந்து நடைபெற- தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.P. சத்தியநாதன்-திருமதி. கிறிஸ்டி**

சிறுவர் ஊழியம் நல்ல முறையில் நடைபெற்றதற்காக- கலந்து கொண்ட 85 பிள்ளைகளுக்காக, வாலிபர் கூட்டத்தில் கலந்து கொண்ட 20 பேருக்காகத் துதிப்போம். சாந்தகுமாரிக்கு நல்ல இடத்தில் வேலை கிடைக்க-சத்தியத்தில் வளர, சத்யா, மதன், பாண்டி, தனலட்சுமி, தர்ஷன், கீர்த்திகா ஆகியோர் தங்குவதற்கு நல்ல விடுதியில் இடம் கிடைக்க- நன்றாக படிக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.P. ராஜா-திருமதி. அன்னாள்**

புதிதாக நற்செய்தி கேட்ட அழகம்மாள், லட்சுமி, சுந்தர்ராஜன், பஞ்சவர்ணம், ஈஸ்வரி, முத்துப்பாண்டி ஆகியோருக்காக, முத்துப்பாண்டி தடையிருந்தாலும் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ஓய்வுநாள் பள்ளியில் கலந்து கொள்ளும் 125 சிறுவர்கள் தொடர்ந்து கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**ஜூலை-8**

**அருட்பணியாளர் :**

**திரு. காளிமுத்து-திருமதி. குமுதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெருங்காமநல்லூர், நரியம்பட்டி, காளப்பன்பட்டி, அழகுரெட்டிபட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் பிச்சையம்மா, பாண்டியம்மா, ஜெயராணி, முத்துலட்சுமி ஆகியோருக்காக, பியூலா வீட்டில் நடைபெற்ற ஜெப கூடுகைக்காகத் துதிப்போம். லட்சுமி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, கணவனை இழந்த முத்துலட்சுமிக்கு தேவஆறுதல் கிடைக்க, ராம்பிரசாத் திருமணம் நடைபெற, தமிழரசிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**

**திருமதி.பாலின் சௌந்தர்யா**

ஜான்சி வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காக. விஜயாவின் குடும்பம் மீண்டும் ஒன்று சேர்ந்ததற்காக, திருமுழுக்கு எடுத்த சிவஜோதி, போதுமணி, ஷர்மிளா, யோசனை, மகாராணி, சாமுவேல், மகாபாரதி ஆகியோருக்காகத் துதிப்போம். அழகுத்தாய், ஆரோக்கியம், அபிமன்யு ஆகியோர் எலும்பு முறிவு நோயிலிருந்து சுகம் பெற, ரூபன், சுவாதி, ஏசா, யாக்கோபு ஆகியோருக்கு விரைவில் திருமணம் நடைபெற, கணவனை இழந்த விக்டோரியாவுக்கு தேவன் ஆறுதல் தர, செல்வகனிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு.M. அகஸ்டின்-திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காந்திநகர், சங்கம்பட்டி, மணல்பட்டி, செல்லம்பட்டி, சக்கரப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, செல்லப்பாண்டி விபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, சித்ராவுக்கு கிடைத்த சுகத்திற்காக, திருமுழுக்கு எடுத்த அன்பு, முகேஷ், கோபால், ஜெயந்தி, ஐஸ்வர்யா, செல்வம், சக்தி ஆகியோருக்காகத் துதிப்போம். கீர்த்திக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஜெகதீஷ்-திவ்யா திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**ஜூலை-9**

**அருட்பணியாளர் :**

**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

மோட்சம்மா, வண்ணக்கிளி, மாயக்கா ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். கொடியம்மா இரட்சிக்கப்பட, கல்லறைத் தோட்டம் வாங்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்ட

பாண்டீஸ்வரி, குமார் ஆகியோருக்காக, சந்திராதேவி குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, அழகுத்தாய்க்கு சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை கிடைத்ததற்காக, லட்சுமி வைரஸ் காய்ச்சலிலிருந்து சுகம் பெற்றதற்காக, அம்சு விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். குமார் இருதய நோயிலிருந்து சுகம் பெற, ராமசாமி, கனகராஜ், ரவி, அமுதா, ஆனந்தகுமார் ஆகியோர் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, லட்சுமி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ராஜன், ஜான், மணி ஆகியோர் இரட்சிக்கப்பட-ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.A. பால்ராஜ்-திருமதி. ஏஞ்சல்**

புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட குணா, சதீஷ், திருநாவுக்கரசு, முத்து, அபிநயா, மீனா, ஐஸ்வர்யா, சரண்ராஜ், ராஜா, சந்தியா ஆகியோருக்காக, ஐஸ்வர்யா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். பிரவின் சோரியாசிஸ் நோயிலிருந்து சுகம் பெற, மீனா, சரண்ராஜ் ஆகியோர் தொடர்ந்து ஆலயம் வர-குடும்பமாக இரட்சிக்கப்பட, திருநாவுக்கரசு வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

ஜூலை-10

**அருட்பணியாளர் :**

**திரு.G. ஜெகன்-திருமதி. திவ்யா**

திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக உள்ள அருண்குமார், பிரியதர்ஷினி ஆகியோருக்காகத் துதிப்போம். குழந்தை ஜெலின் (தைராய்டு அளவு அதிகம்), முனியசாமி (தோல் நோய்), அஞ்சுகனி கணவர், இந்துமதி (ஆஸ்துமா) ஆகியோர் நிறைவான சுகம் பெற, தாயை இழந்த லக்ஷிதாவுக்கு தேவன் ஆறுதல் தர, CVG யில் கலந்து கொண்ட பிள்ளைகள் இரட்சிக்கப்பட-அவர்களது பெற்றோர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. ஜஸ்டின் சாமுவேல் - திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அழகுப்பிள்ளை நகர், லாலா சத்திரம், சாய் கார்டன், ஏற்குடி, காந்தி நகர், வடிவேல்கரை, சொக்கநாதபுரம் ஆகிய பகுதிகளுக்காக, நிவேதாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, செல்வாவுக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க, வேல்முருகன் ஆஸ்துமா நோயிலிருந்து சுகம் பெற-விசுவாசத்தில் பெலப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. பிலிப் முருகன்-திருமதி. அனிதா**

குளத்துப்பட்டியில் தண்ணீர் பிரச்சனை தீர்க்கப்பட, கொடியம்மாள் குடும்பம், சிந்தியா குடும்பம் இரட்சிக்கப்பட, சந்தியாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சிறுவர் ஊழியம் தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

ஜூலை-11

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. வயநாட்டுமுத்து-திருமதி. கனியமுது**

அழகம்மாள், ஜெயசீலா ஆகியோர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். கனகா, லட்சுமி, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.J. ஜெயகுமார்-திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கன்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளப்பாறைபட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, அனிதா, தேவி ஆகியோர் CVGஐ சிறப்பாக நடத்தியதற்காக, ஊழியர் மனைவி கனிக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு.P. தேவதாஸ்-திருமதி. பிலோமினா**

பவுனம்மாள், வாசுகியம்மாள், அருணாச்சலம் ஆகியோர் சுகம் பெற, திலகா, நிரஞ்சனா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம்

கிடைக்க, ஷீலா அரசு தேர்வை நல்லமுறையில் எழுத-வெற்றி பெற, எஸ்தர் வீடு கட்டுமான பணிகள் விரைவில் முடிவடைய, கீழே விழுந்து காயமடைந்த நாகராஜன் சுகம் பெற ஜெபிப்போம்.

ஜுலை-12

**அருட்பணியாளர் :**

**திரு.G. நாதன்-திருமதி. மேகலா**

சதீஷ் மனைவிக்கு ஆண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். ஹரி இரத்த அழுத்த நோயிலிருந்து சுகம் பெற, செல்வ சுகன்யா கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற-தொழில் நல்ல வளர்ச்சி அடைய, வேலம்மாள் முழங்கால் வலியிலிருந்து சுகம் பெற, காயத்திரி கர்ப்பப்பை கட்டி நோயிலிருந்து சுகம் பெற, கவிதாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.J.உலகநாதன்-திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகப்பட்டி, வள்ளுவர் காலனி, ஆசிரியர் காலனி, கோட்டப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, கிருபாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, மேரி கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற்றதற்காக, ஸ்டாலினுக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட சுகன்யா, விஜயலட்சுமி ராஜேந்திரன், மகேந்திரன், ராசாத்தி, கெங்கா ஆகிய குடும்பங்கள் இரட்சிக்கப்பட, கங்கா, மதன் ஆகியோரின் திருமண தடைகள் மாற, தவமணி, விஜயலட்சுமி, ராஜேந்திரன் ஆகியோருக்கு சுகம் கிடைக்க, சுகன்யா, மகேந்திரன், ராசாத்தி ஆகியோரின் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

### விருதுநகர் மாவட்டம்

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**

**திருமதி. விஜயா**

காவியா கணவனோடு சேர்ந்து வாழ்வதற்காக, இருளாயிக்கு கண் அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். காவியா கணவர் மனந்திரும்பி-ஆண்டவரை ஏற்றுக் கொள்ள, சுகன்யா குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஜுலை-13

### தென்காசி மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு. லிவிங்ஸ்டன்**

தோன்றுகால், கே.கோவில்பட்டி, வலசை, சிதம்பரம், கலப்பாங்குளம், திருமலாபுரம் ஆகிய கிராமங்களில் VBS நடைபெற்றதற்காகத் துதிப்போம். தாமரைச்செல்வி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, அறுவைச்சிகிச்சை செய்து கொண்ட காளியம்மாளுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### கரூர் மாவட்டம்

**அருட்பணியாளர் :**

**திரு. J. பவுல்ராஜ்- திருமதி. எமீமாள்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லரப்பாளையம், மூலப்பட்டி, பழமாபுரம், அதியமான் கோட்டை, செம்மடை, மருத்துவர் நகர், சமத்துவபுரம் ஆகிய கிராமங்களுக்காக, ஜெயராஜ்-ஜெனிபர் திருமணம் நடைபெற்றதற்காக, பிரின்ஸிக்கு கிடைத்த வேலைக்காக, ஏசம்மாள் வீடு வழக்கு முடிவுக்கு வந்து அவர்களுக்கு நியாயம் கிடைத்ததற்காக, ரோஸ்லினுக்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்ததற்காகத் துதிப்போம். ஐஸ்வர்யாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, லின்ஸிக்கு பணியிட மாற்றம் கிடைக்க, ரூத்துக்கு வேலை கிடைக்க, வீரசின்னன், ரெங்கராஜ், மார்ட்டின் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, வீரகோபால் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, சௌமியா ராஜ்குமாருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

### விழுப்புரம் மாவட்டம்

**அருட்பணியாளர் :**

**திரு.D. தங்கராஜ்-திருமதி. எஸ்தர் பிரியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மடப்பட்டு, செம்மணந்தல், மேட்டத்தூர், பருகம்பட்டு, அரும்பட்டு, இருந்தை சித்தானங்கூர்,

காந்தலவாடி, குடிமாங்குப்பம், பெரும்பாக்கம் ஆகிய கிராமங்களுக்காக, ஜெபராஜ் கல் அடைப்பு நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, ராதாகிருஷ்ணன் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். போலி பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ள நடராஜ், மணி ஆகியோருடைய 27 ஏக்கர் சொத்து மீண்டும் அவர்களுக்கே கிடைக்க, சுதாவிற்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்க, அனுஷ்கா, கிரேஸ் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, மகேந்திரன் தன் மனைவி பிள்ளைகளோடு சேர்ந்து வாழ ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்** **ஜுலை-14**

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), ஊழியர்கள்: திரு.R. பால சுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்செண்ட், திரு.K பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ், திரு.B. ஹெமின், திரு. ஜாம்சுவான்பாவ் சுந்தாக், திரு.T.S. தெங்கோலுன் ஹோகிப் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**மொழிபெயர்ப்புப் பணி**

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்புப் பணி விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி "ஆடியோ வேதாகமம்", தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம்** **ஜுலை-15**

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச் சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A சாம் டென்சிங், திரு.A ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**வளரும் விண்ணரசு**

இம்மாதம் இதழ் வெளியிடப் பட்டதற்காக, இதழின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். இதழில் வெளியிடப்படும் கட்டுரைகள் வாசகர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க, வாசகர்கள் விரும்பும்வண்ணம் இதழ் வெளியிடப்பட, புதிய வாசகர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, இருவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணி களுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்** **ஜூலை-16**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Dr.S. அருண், திரு.K ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு.J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 17 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜினி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்:**

**திரு. ஓமெந்திராகுமார்**

**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாகர்கோவில், கம்பிபாலம், ஆசாரிபள்ளம், பறக்கை, தெங்கம்புத்தூர், வடசேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## ஜூன் மாத
## வேத வினாக்களுக்கான விடைகள்
### 2 கொரிந்தியர் 8 முதல் 13 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

1. நற்சீர் – விண்ணப்பம் 13:9
